பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.

சங்கீதம் 37:4

செய்தி மலர்
2015
ஜூன்

இதழ் : 1
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் 2015–ம் வருடத்தில் 6வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நமக்கு தந்திருக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

கடந்த மாதத்தில் நடந்த சபை ஆராதனைகள், ஊழியங்கள்,ஜெப கூடுகைகள், எல்லாவற்றிலும் தேவ பிசன்னம் இருந்ததை உணர முடிந்தது. அது மாத்திரமல்ல எல்லா குடும்பங்களிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமும் வழி நடத்துதலும் இருந்தபடியால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள செய்வார்.(சங்37:4)**

**கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாய் இரு:** தேவனுடைய செட்டைகளின் கீழ் வரும் பொழுது எப்பொழுதும் உள்ளத்தில் மகிழ்ச்சியால் நிரம்ப வேண்டும். ஏனென்றால் பூமியும் அதின் நிறைவும் என்னுடையது(கர்த்தருடையது)என்று சங் 50–12ல் வாசிக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் சம்பவிக்கும் எல்லாவற்றையும் அவருடைய அனுமதியில்லாமல் நடப்பதே இல்லை. நமக்காய் சிலுவையில் எல்லாவற்றையும் ஆசீர்வாதமாக மாற்றி வைத்திருக்கிறார். நம்முடைய சாபங்களை, புலம்பலை ஆசீர்வாதமாக மாற்றி வைத்து விட்டார்.

அன்னாள் விசனம் அடையும்படி பென்னினால் அவளை மனமடிவாக்கினாள் (I சாமு I:6,7) ஒரு நாள் கர்த்தருடைய சந்நிதியில் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி, பொருத்தனை செய்து விண்ணப்பம் பண்ணினாள் (I சாமு I:10)

தன்னுடைய இருதயத்தை கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றினாள். (I சாமு I:15) அப்புறம் அவள் துக்க முகமாய் இருந்ததில்லை. மனதிலே மகிழ்ச்சியாய் இருந்தாள். நாமும் நம்முடைய காரியங்களை தேவனுக்கு முன்பாக சொல்ல வேண்டும். பின்பு அன்னாளை போல நாமும் மனதில் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அப்படியல்லாமல் பல மணிநேரம் ஜெபம்,உபவாசம் , ஊழியம் என்று செய்தும் துக்கமுகமாக இருந்தால், தேவனிடம் மனமகிழ்ச்சியாய் இல்லாமல் இருந்தால், இன்னும் நாம் அவரை நம்பவில்லை என்றுதான் அர்த்தம். அப்படி இல்லாமல் அவர் செய்வார், அவரால் முடியாத காரியம் ஒன்றும் இல்லை, என்று நம்ப வேண்டும், அப்படி நம்பினால் நமது உள்ளத்தில் தானாய் மகிழச்சி பெருகும், வாயினால் அவரை துதிக்கவும் முடியும்.

3 **இருதயத்தின் வேண்டுதல்களை அருள் செய்வார்:**

ஏற்கனவே சிலுவையில் நமக்காய் ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார், இதை இப்போது வாசிப்போம் என்றால். நம்முடைய தேவைகளை நாம் பெற்றுக்கொண்டு அனுபவிக்க முடியும். அன்னாள் அதற்கு பின் துக்கமுகமாய் இருக்கவில்லை, அதனால் தேவன் அவள் இருதயத்தின் வேண்டுதலை கேட்டு அருள் செய்தார். நாமும் அது போல கர்த்தரிடத்தில் மனமகிழ்சியாயிருந்தால் நம்முடைய தேவைகள் எதுவாக இருந்தாலும் அருள் செய்ய அவர் வல்லவராயிருக்கிறார். இந்த மாதத்தில் தேவ சமூகத்தில் விண்ணப்பங்களை ( வேலை, பிள்ளைகள் படிப்பு, திருமணம், பிள்ளைபாக்கியம், விசா பிரச்சனை, வியாதி ) சொல்லி ஜெபித்துவிட்டு அன்னாளை போல கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் இருக்கும் போது, அன்னாளை போல நாமும் சொல்ல முடியும் இந்த காரியத்திற்காய் விண்ணப்பம் பண்ணினேன் நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார் ( I சாமு 1:27 )

அவருக்கே மகிமையுண்டாவதாக

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

**சாட்சி**

கடந்த மாதம் என் மனைவியும் மகளும் ஒரே நேரத்தில் டைஃபாயட் காய்சலால் பாதிக்கபட்டிருந்தார்கள், என் மகளுக்கும் மனைவிக்கும் விட்டு விட்டு காய்சல் இருந்ததால் $H_1N_1$ பரிசோதனைக்கு இரத்தம் அனுப்பட்டது ,அதில் என் மகளுக்கு Nagative report என் மனைவிக்கு Positive என்றும் இருந்தது மருத்துவர்கள் என் மனைவிக்கு நேரம் குறித்துவிட்டார்கள் 30 சதவிகிதமே பிழைக்க Chance என்று கூறிவிட்டனர். என் மகளோ நிரைமாத கர்பணி அவளுக்கு காய்சல் இருந்ததால் குழந்தைக்கு அது எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற ஒரு கவலை, என் மனைவியின் நிலையை நினைத்து ஒரு புறம் கவலை ,என்ன செய்வது என்று அறியாமல் குழம்பி கொண்டிருந்தேன், கடைசியில் ஆண்டவர்தான் என் தஞ்சம் என்று சொல்லி ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து ஜெபித்தேன். அருமையான அஹமதி திருச்சபையின் விசுவாசிகள் என் மகளுக்காகவும், என் மனைவிக்காகவும் தொடர்ந்து ஜெபித்தார்கள். ஏப்ரல் 12 முதல் 20ஆம் தேதிவரை ஒரு நிலையில்லாமல் இருந்தது 20 ஆம் தேதி காலையில் எல்லாருடைய ஜெபத்தையும் கேட்டு என் மனைவிக்கு வெளியில் இருந்து பிராணவாயு கொடுக்காமல் தானாக சுவாசிக்க தேவன் கிருபை செய்தார். அதே போல என் மகளுக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் கடந்த மே மாதம் 9ஆம் தேதி கர்த்தருடைய கிருபையால் ஒரு ஆண் குழந்தையை சுக பிரசவத்தில் பெற்றெடுக்க தேவன் கிருபை செய்தார், எனக்காக ஜெபித்த விசாரித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இயேசுவின் நாமத்தில் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன், இந்த சாட்சியின் மூலமாக தேவனின் நாமம் மகிமைபடுவதாக

( செய்திமலர் பொருப்பாளர் சகோ. ஐசக் துரை )

## விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (மத்தேயு 26:41)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவை பாடுகளுக்கு முன் தன்னுடைய சீஷர்களுக்கு செய்த ஒரு குட்டி பிரசங்கம், இது "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்றார். ஆவி உற்சாக முள்ளதுதான்,மாம்சமோ பெலவீனமுள்ளது என்றார். ஆவி ஜெபிக்கலாம் என்று சொல்லுகிறது. மாம்சமோ தூங்கலாம் என்று சொல்கிறது. முடிவு எடுக்க வேண்டிய மூளையோ திணருகிறது. "மாம்ச சிந்தை மரணம்" ஆவியின் சிந்தையோ ஜீவனமும் சமாதானமும், என்று ரோமர் 8:6 எச்சரிக்கிறது. காலையில் தேவனின் (அலாரம்) சத்தம் கேட்டாலும் அதை அனைத்துவிட்டு தூக்கத்தை விரும்பும் சுக போகிகள்தான் எத்தனை பேர்?

கெத்சமனேவில் இரத்த வியர்வை சிந்திய இயேசுவின் குரல் இன்னும் ஒலிக்கிறது–விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஜெபம் பண்ணாமல் இருப்பதற்கு எத்தனை எத்தனை சாக்கு போக்குகள்! வாலிபர்கள் சொல்லுவார்கள் – வயதாகட்டும் ஜெபிக்கலாம் என்று , வயதானோர் சொல்லுவார்கள் ஐயோ வயதாகிவிட்டதே ! கால்கள் ஆட்டம் கண்டு விட்டதே ! எப்படி ஜெபிப்பது.? வயது 84 நிறைந்த ஒரு மூதாட்டி, அவர் ஒரு விதவை ஒரு வேளை அவள் சரீரம் சோர்ந்து போய் இருக்கலாம், ஆனால் ஆவிக்குறிய வாழ்விலே தொய்வு ஏதும் இல்லை, ஜெபிக்கிறார் , ஜெபிக்கிறார், இரவும், பகலும், உபவாசித்து ஜெபிக்கிறார். தேவாலயத்தைவிட்டு நீங்காமல் ஆராதனை செய்து கொண்டிருக்கிறார். அந்த மூதாட்டி ஓர் தீர்க்கதரிசி என்று வேதம் சொல்லுகிறது.

அன்று அன்னாள் (1சாமு 1) ஜெபித்தாள், சாமுவேலைக் கண்டாள். இந்த அன்னாள் (லூக்கா 2 ) ஜெபித்தாள். தீர்க்கதரிசி பெரியவரான இயேசு கிறிஸ்துவை கண்டாள், சகோதரனே, சகோதரியே,நீ ஜெபிக்கும் போது, ஆவிக்குறிய கண்கள் திறக்கப்பட்டு , தேவனுடைய பிரசன்னத்தை காணமுடியும் (நீதி 8:17) சொல்லுகிறது, அதிகாலையில் என்னை தேடுகிறவர்கள் என்னை கண்டடைவார்கள்" என்று. எதை கண்டடைவார்கள்? கர்த்தருக்கு பயப்படும் ஞானத்தை கண்டடைவார்கள். உலக அறிவு அந்தஸ்து, பதவி, பட்டம் எல்லாம் குப்பை எனறு பவுல் சொல்லுகிறார். அவை ஒன்றுக்கும் உதவாது.

உலக அறிவை பணத்தை, பதவியை தேவ சித்தத்தின்படி பயன்படுத்துவதுதான் ஞானம். தேவ ஞானம் ஒரு விசுவாசியை பரிசுத்தமாய் காத்துகொள்ள உதவி செய்கிறது. பாவம் செய்ய விடாமல் தடுத்து நிறுத்துகிறது. வாலிபபிராயத்தில் இருந்து யோசேப்புக்கு எகிப்த்திலே "மாம்ச இச்சை" என்ற சாத்தான் ஒரு பெண்ணின் ரூபத்தில் பெரிய சோதனையைக்

கொண்டு வந்தான், தேவனுக்கு பயந்து யோசேப்பு "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி"? என்று சொல்லி, பாவ வலையில் விழாமல் தன்னை காத்து கொண்டான், பாவத்தில் தீட்டு பட்ட வஸ்திரம் அல்ல, பரிசுத்தம் நிறைந்த இரச்சிப்பின் வஸ்திரம் போதும் என்று சொல்லி, தேவன் அவனுக்கு நியமித்திருந்த ஓட்டத்தில் பொறுமையோடே ஓட ஆரம்பித்தான் , காரணம் –யோசேப்பு தேவனை தேடுகிற ஒரு மனிதனாய் வாழ்ந்தான். தன் சொந்த ஊரை விட்டு தூரமாய் போனாலும், தகப்பனையும்,சகோதரர்களையும், பிரிந்து வாழ்ந்தாலும், அவன் உள்ளம் தன்னை உருவாக்கிய, பரமதகப்பனோடு இருந்தது. அது யோசேப்புக்கும் தேவனுக்கும் உள்ள நெருங்கிய உறவை காட்டுகிறது. யோசேப்பு தன் வாழ்வில் தேவனை அதிகமாய் தேடினான். அதனால்தான் தேவன் சொப்பனம் மூலமாக அவனோடு பேசினார். அவனுக்கென்று தான் வைத்திருக்கும் அருமையான எதிர்காலத்தை வெளிபடுத்தினார். பார்வோனின் சொப்பனத்தின் அர்த்தத்தை சொல்லும் ஞானத்தை அவனுக்கு தந்தார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே தேவனோடு ஜெபிக்கும் பொழுது தேவ பிரசன்னத்தை உணர முடியும். பாவத்திற்கு விலகி ஓட முடியும், மாத்திரமல்ல தேவ சித்தத்தை அறிந்து கொள்ள முடியும். "என் சித்தப்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று இயேசு ஜெபித்தார். "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யபடுவதாக என்று ஜெபிக்க தம் சீஷர்களுக்கு கற்று கொடுத்த இயேசு நெருக்கமான நேரத்திலும் அதை கடைபிடிக்கிறார் வெறும் சொல் வீரனாய் அல்ல ! செயல் வீரனாய் கெத்சமனேயில் ஜெபித்த இயேசு நமக்கு முன் மாதிரி! அவரையே நாம் பின் தொடர்வோம் .

முழங்காலில் யுத்தம் செய்திடுவோம்
தேவனின் சத்தம் கேட்டிடுவோம்
காலையும் மாலையும் ஜெபித்திடுவோம்
கர்த்தரின் சித்தம் அறிந்திடுவோம்.
இன்றே அவர் பணி புரிந்திடுவோம்
அவர் நாமம் பிரசித்தம் செய்திடுவோம் .

என வாழ்த்தி விடைபெறும்
கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரர் **கிறிஸ்டோபர்**

# உலகின் முதன்மை பெண்கள்

1. ஐ.நா. பொது அசெம்பிளியில் முதல் பெண் தலைவர், விஜயலட்சுமி பண்டிட் (இந்தியா)
2. விண்வெளியில் அதிக நாட்கள் தங்கி இருந்த முதல் பெண், சுனிதா வில்லியம்ஸ் (இந்தியா)
3. (195) நாட்கள் ஐந்து கண்டங்களில் நீந்திய முதல் பெண்,பியூலா சௌத்திரி (இந்தியா)
4. ஐக்கிய நாட்டில் குடிமக்களின் ஆலோசகராக இருந்த முதல் பெண், கிரண் பேடி (இந்தியா)
5. ஜிப்ரால்டர் ஜல சந்தியை நீந்தி கடந்த முதல் பெண், ஆர்தி ப்ரதான் குப்தா (இந்தியா)
6. உலகின் முதல் பெண் ரயில் ஓட்டுனர், சுரெகா யாதவ் (இந்தியா)
7. காமன் வெல்த் நாடுகளில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் பெண், அன்னா சாண்டி (இந்தியா)
8. தன்னந்தனியாக ஒரு படகில் உலகை வலம் வந்த முதல் பெண், காட்டக் (ஆஸ்திரேலியா)
9. ஆங்கில கால்வாயை நீந்தி கடந்து சென்ற முதல் பெண், மரியா லூ மிஷா (ஸ்பெயின்)
10. நயாகரா நீர்விழ்ச்சியை ஒரு கயிற்றின் மூலம் தாண்டிய முதல் பெண் ,மரியா ஷெபல் டெர்னியா (இத்தாலி)
11. ஏவரஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண், ஜங்கோ தாபே (ஜப்பான்)
12. உலகின் முதல் பெண், பைலட் மிஸ்யேல் பிங்கல் ஸ்டிங் (இஸ்ரேல்)
13. உலகில் அதிபர் பதவி வகித்த முதல் பெண் ,இஸபெல் பெரான் (அர்ஜன்டினா)
14. உலகின் பிரதமர் பதவிவகுத்த முதல் பெண், சிரிமாவோ பண்டாரநாயகா (இலங்கை)
15. மருத்துவ துறையில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண், கொடி கோரி (அமெரிக்கா)

## அவருடைய தழும்புகளால்

இரண்டாம் உலக யுத்தத்ததிற்கு காரணமானவரும், யூதரின் சத்துருவுமாயிருந்த அடால்ப் ஹிட்லரின் மனைவிக்கு பிரசவம் நேறிடுகிற சமயம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அவர்கள் அட்மிட் செய்யப்ட்டது ஒரு கிறிஸ்து மருத்துவமனை. அதில் அவருடைய படுக்கைக்கு நேராக இயேசு சிலுவையில் அறையப்படும் காட்சி படமாக வரையப்பட்டு, அதில் வாசகம் எழுதபட்டிருந்தது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம், என்று. இதை பார்த்து ஹிட்லரின் மனைவி அந்த படத்தை அப்புறபடுத்துங்கள் எனக்கு பிறக்கும் குழந்தை கண்ணை திறக்கும் போது அந்த தருதலையின் படத்தை பார்க்க கூடாது என்றாள். நர்ஸ் அது என்வேலையல்ல நான் படத்தை எடுக்க முடியாது என்றார்கள். டாக்டர் அழைக்கப்பட்டார். அப்படத்தை உடனடியாக அப்புறபடுத்துங்கள். என் குழந்தை கண்ணை திறந்து இந்த தரித்தரனை சிலுவையில் அறையப்பட்ட அந் யூதனை என் குழந்தை பார்க்க கூடாது என்றார்கள். டாக்டரோ அது முடியாது என்று சொன்னார். உடனே அந்த மருத்துவமனை உரிமையாளர் அழைக்கப்பட்டார். அவரிடம் சொல்லி உடனே அப்படத்தை அகற்றுங்கள் என்றார். மருத்துவமனை உரிமையாளரோ முடியாது என்றார். நான் யார் என்று காட்டுகிறேன் என்று சொல்லி கொண்டே ஹிட்லருக்கு போன் செய்தார்கள். ஹிட்லரும் அவர் சேனையும் வரும்முன்னே அம்மையாருக்கு குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை!. ஆனால் படத்தையோ, ஏன் இந்த உலகத்தையோ பார்க்க கூடாதபடி குருடாய் பிறந்தது..... மனிதன் தேவனுக்கு முன்பாக ஆணவம் கொள்ள கூடாது.. இன்று ஹிட்லர் எங்கே? அவர் மனைவி எங்கே? குழந்தைதான் எங்கே? இயேசுவோ என்றென்றும் நிலைத்திருக்கிறார். அறியாமை பாவமல்ல. ஆணவமே பாவம்! அது அழிவை கொண்டு வரும்! சரித்திரங்கள் அதற்கு சாட்சி பகருகின்றன..

# கனத்தை விரும்பாதே

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரியே சகோதரனே! சாதாரணமாக பாவம் செய்கிறார்கள் தாங்கள் செய்த பாவங்களை குறித்து உணரும் போது தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கிறார்கள். ஆனால் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் சொல்வதை பாருங்கள், அவனுடைய பாவம் சுட்டிகாட்டியபோது அவன் சொல்லுகிறான் நான் பாவம் செய்தேன் இப்பொழுது நீர் என்னை கனம் பண்ணும் என்கிறான். சவுல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததை அறிந்த போதிலும் , அவன் மன்னிப்பை தேடுவதற்கு பதிலாக கனத்தை தேடுகிறான் இது மிகவும் துக்ககரமான விஷயம் ஆகும். ஒருவன் தான் பாவம் செய்ததை அறிந்தபோதும் அதற்கு மன்னிப்பை தேடாமல் கனத்தை தேடுவானானால், அவனுடைய வாழ்க்கை பரிசுத்தமில்லாதது என்பதை நாம் விளங்கி கொள்ள வேண்டும்.

சவுல் வில்வீரரால் மிவும் காயப்பட்ட போது அவன் தான் மரிக்க போவதை அறிந்தான். அந்த கடைசி நிமிடங்களிலாவது தான் செய்த பாவத்திற்கு மனஸ்தாபபட்டு மனம் திரும்புவதற்கு பதிலாக அந்த இடத்திலும் கனத்தையும். கவுரவத்தையும்தான் நாடுகிறான். சவுல் தன் ஆயுததாரியை நோக்கி : அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து என்னை குத்தி போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னை குத்தி போடு என்றான். அவனுடைய எண்ணமெல்லாம், தன் மரணத்திற்கு பின்னர் தான் விருத்தசேதனம் இலலாத ஒரு நபரால் கொல்லப்பட்டதாக ஒருவரும் தன்னை குறித்து சொல்லக்கூடாது என்பதில்தான் அவன் குறியாக இருந்தான். இதுதான் உண்மை, அவனை யார் கொலை செய்தாலும் மரணத்திற்கு பின் அவன் போக போகிற இடம் நரகமே" அவனுடைய ஆயுததாரி அவனை கொல்ல மறுத்த போது சவுல் தன் பட்டயத்தை நட்டு அதின் மேல் விழுகிறான் . அவனுடைய தற்கொலை முயற்சியும் தோல்வியில் முடிந்தது. மரணமும் தன்னை பகைக்கிறது என்பதை அறிந்து கொண்டவுடன் ஒரு அமலேக்கியனிடம் சொல்லுகிறான்.நீ என்னை கொன்று போடு என்கிறான். அமலேக்கியன் அவன் மேல் ஏறி நின்று அவனுடைய தலையை வெட்டி போடுகிறான்.

இதிலே நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் கனத்தை விரும்பிய சவுலுடைய எண்ணம் முழுவதும் விருத்தசேதனம் பண்ணபடாத ஒரு பெலிஸ்தியன் தன்னை கொல்லுவதை விரும்பவில்லை. ஆனால் ஒரு அமலேக்கியனிம் தன்னை கொல்லும்படி சொல்லுகிறான். இதுதான் அவன் செய்த செயல்களில் கீழ்தரமான காரியம், தேவனுடைய பார்வையில் பெலிதியஸ்தரை காட்டிலும் அமலேக்கியர்கள்தான் மோசமானவர்கள், அருவருப்பாவர்கள், சவுலின் முடிவு நம் ஒவ்வொருவருக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது. கனத்தை விரும்பாதே! இந்த உலகத்தின் கனம் ஒரு நிழலை போல மறைந்து போக கூடியது. நாம் எவ்வளவு அதிகமாக அதை நாடி போகிறோமோஅவ்வளவு அதிகமாக அது நம்மை விட்டு ஓடி போகும்.

நாம் எப்படி என்பதை நினைத்து பார்ப்போம்! சவுலை போல நாம் பாவத்திற்கு தேவனிடம் மன்னிப்பு கோருவதற்கு பதிலாக கனத்தை எதிர்பார்கிறோமா? அல்லது ஆயக்காரனை போல நம்மை தாழ்த்தி தேவனிடத்தில் மன்னிப்பை கோருகிறோமா? சிந்திப்போம் ! செயல்படுவோம் !

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்.

இயேசுநாயகம்

# 2015 – மே மாத விடைகள்

1. அப்போ– 1:3 – 40 நாட்கள் 2. அப்போ– 28:30 – 2 வருடங்கள்

3. அப்போ– 22:27 – சேனாபதி 4. அப்போ– 14:19 – யூதர்கள்

5. அப்போ– 13:1 – பர்னாப,நிகர்,லூகி,மனாயீன்,சவுல்

6. அப்போ– 7:58 – சவுல். 7. அப்போ– 4:19 – பேதுருவும், யோவானும்

8. அப்போ– 8:40 – ஆசோத் 9. அப்போ– 9:25 – ஒரு கூடையிலே வைத்து

10. அப்போ–11:26 – அந்தியோகாவிலே 11. அப்போ– 12:25 தர்ம ஊழியத்தை

12. அப்போ– 18:11 – ஒரு வருடமும் ஆறுமாதமும்

13. அப்போ– 17:16 – அத்தேனே பட்டணம்

14. அப்போ– 21:40 –எபிரேய பாஷை 15. அப்போ– 28:11 – மிதுனம்

## 2015 மே மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி

Sis. ஜோன் அசோக்குமார்

Sis. சுகந்தி தம்புக்குமார்

Sis. மரகதம் ஸ்டீஃபன்

Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. ஹெப்சிபா ஸ்டீஃபன்

Sis. டஃப்னி ஜெபசிங்

Sis. செலின் டேவிட்

Sis. மரியா குளோரி தாஸ்

Sis. டெய்ஸி எபிநேசர்

Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்

Bro. ஜாண்ஸன்

Bro. ஜாண்

# 2015 – ஏப்ரல் மாத விடைகள்

1. II சாமுவேல் 14:25 அப்சலோம் 2. II சாமுவேல் 11 : 2 பத்சேபாள்

3. II சாமுவேல் 15 : 6 அப்சலோம் 4. II சாமுவேல் 19 : 26 மேவிபோசேத்

5. II சாமுவேல் 13 : 3 யோனதாப் 6. II சாமுவேல் 18 : 15 அப்சலோம்

7. II சாமுவேல் 13 : 27 அகிதோப்பேல் 8. II சாமுவேல் 19 : 37 பர்சிலா

9. II சாமுவேல் 12 : 20 தாவீது 10. II சாமுவேல் 23 : 21 பெனாயா

11. II சாமுவேல் 3 : 8 அபனேர் 12. II சாமுவேல் 18 : 15 பெனாயா

12. II சாமுவேல் 1 : 13 அமலேக்கியன் – 14. II சாமுவேல் 23 : 20 பெனாயா

15. II சாமுவேல் 13 : 1 தாமார்

## 2015 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. ஜெபராணி
Sis. சாந்தி
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஹெப்சிபா ஸ்டீஃபன்
Sis. டஃப்னி ஜெபசிங்
Sis. செலின் டேவிட்
Sis. சோபியா மேஷாக்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. சுபா ஸ்டீஃபன்

Bro. அந்தோனிசாமி
Bro. ஜாண்ஸன்
Bro. ஜாண்
Bro. நவீன் ஜீவ காருண்யன்

“..வாதை உன் கூடாரத்தை அணுகாது ” சங்கீதம் - 91:10

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வி. சாரா கிரேஸ் சாம்சன்
செல்வி. பிரவீனா லாசர்
செல்வி. ஆன்ஸிலி ஆல்பர்ட்சிங்
செல்வி. சாரா ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ

செல்வன். வெங்கடேஷ் ராஜன்
செல்வன். ஃபீஸ்டஸ் ஃபெலிக்ஸ்
செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
செல்வன். ராயன் சதீஷ்குமார்
செல்வன். ஜெய்ராஜ் விசு
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
செல்வன். ஸெர்வின் சிவகுமார்
செல்வன். ஜோஷ்வா ஜோசப்
செல்வன். ஜோஷ்வா ஜாண்சன்
செல்வன். ரனால்டோ ஜோசப்
செல்வன். ஜாண் ஜெரமியா மில்லர்
செல்வன்.சாம்சன் பிலிப் எசேக்கியல்

சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. மேரி கலா ஜெயக்குமார்
சகோதரி. நிர்மலா ஆ. யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி.இசைவாணி வில்கின்ஸ்சன்
சகோதரி. வித்யாவதி ஜெயச்சந்திரன்
சகோதரி. பிரமிதா ரூத் பிரிஜ்டா
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்

சகோ. மனோகரன். P
சகோ. ஜாண் கெஸ்டன்
சகோ. ஜெயக்குமார்
சகோ. ஸ்டீபன். R
சகோ. ஜீவா
சகோ. ஜெஸ்டின்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ. டேனியல் எசேக்கியேல்
சகோ. பால் புருஷோத்தமன்
சகோ. கிரன் குமார்
சகோ. பக்தராஜ்
சகோ. மனோகரன்
சகோ. அந்தோனி சாமி
சகோ. பால் பாண்டியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. லாவண்யா வினோத்குமார்
திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. ஜாண் வெஸ்லி
திருமதி & திரு. M. ஜேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட்ஜெயகுமார்
திருமதி & திரு. ஜெயச்சந்திரன்
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. ஸ்டீபன். R

# 2015 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/06/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |
| 14/06/2015 | சகோ.ஆராக்கியதாஸ் | சகோ.ரவிஜான் பீட்டர் |
| 21/06/2015 | சகோ.ஸ்டாலின் | சகோ.அசோக்குமார் |
| 28/06/2015 | சகோ.ஜான் வெஸ்லி | சகோ.சுகுமார் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/06/2015 | சகோ. ஜசக் துரை | சகோ. ரவிச்சந்திரன் |
| 12/06/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. கிறிஸ்டோபர் |
| 19/06/2015 | உபவாச திருவிருந்து<br>Rev. ஹாரீஸன் சின்னகுமார் | |
| 26/06/2015 | குடும்ப ஆராதனை<br>சகோ. ஆரோக்கியதாஸ் சகோ. ஸ்டாலின் | |

11/06/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

(26/06/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹூல்)

0/06/2015 - சகோதரிகள் ஐக்கிய கூடுகை
நாள் – இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

# 2015 ஜூன் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. யார் ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது?
2. சோர்ந்து போகாமல் எப்பவும் ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னது யார்?
3. காணாமல் போனதை தேட வந்தது யார்?
4. பாடையை தொட்டது போது உயிர் பெற்றவன் யார்?
5. நாய்கள் யாருடைய பருக்களை நக்கினது?
6. சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்றது யார்?
7. நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன என்றவர் யார்?
8. இதோ நீ கர்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாய் என வாசிப்பதெங்கே?
9. பற்பல வேலைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்த ஸ்திரி யார்?
10. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுண்டோ என்றது யார்?
11. அன்னாள் யாருடைய மகள்?
12. நான் பரத்துக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றது யார்?
13. வேசிகளிடத்தில் தன் ஆஸ்தியை அழித்து போட்டவன் யார்?
14. அப்பம் புசிக்கும் போது கண்கள் திறக்கப்பட்டவர்கள் யார்?
15. மரித்தபின் ஆபிரகாமின் மடியில் இருந்தவன் யார்?

**விடைகளை வருகின்ற 19-06-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

**விடைகளை லூக்கா புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்**

Praise the Lord

## நம் சிந்தனைக்கு

### தேவனை மாத்திரம் சார்ந்து வாழுங்கள்

அன்பானவர்களே அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.இரண்டு வசனங்களை வாசித்து கடந்து செல்வோம். சகோதர, சகோதரிகளே! நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியமால்,தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ( ரோமர்–12:2)

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப்பியர்–2:5)

அன்பானவர்களே மேலே உள்ள வசனத்தை நாம் தியனித்தோமேயானால் தற்கால கிறிஸ்தவர்களை எச்சரிக்கை செய்கிற வசனமாக காணபப்டுகிறது. காரணம் தற்கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கை தரம் உலக காரியத்துக்கு ஒத்து இருப்பதால் வசனம் இப்படியாக எச்சரிக்கை செய்கிறது. மேலும் திரளான கிறிஸ்தவர்கள் தன் முழு பெலத்தோடு உலக பிரபஞ்சத்தை சுமந்து செல்கிறவர்களாகத்தான் காணப்படுகிறார்கள் இவர்களை பார்த்துதான் வேத வசனம் சொல்கிறது (ரோமர்–12:2) இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் மறுரூபமாகுங்கள். தேவனை மாத்திரம் சார்ந்து வாழுங்கள் என்று நம்மை தட்டி எழுப்புகிறது.

<u>விசுவாசமுள்ள ஜெபம்:</u>

நாம் தேவனை மாத்திரம்தான் சார்ந்து வாழ்கிறோமா என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? ஆம் இதற்கான பதில் நிறைய இருந்தாலும் நாம் இந்த நாளில் எடுத்துக் கொள்வது என்னவென்றால் ஜெப ஜீவியம் தான் அதுவும் விசுவாசமுள்ள ஜெபம்தான். இந்த விசுவாசமுள்ள ஜெபத்தை நாம் எப்படி ஏறெடுக்க முடியும் என்றால்,

1.நம்முடைய சுயத்தின் வலிமைக்கு முற்றுபுள்ளி வைத்தால் ஏறெடுக்கமுடியும்.

2.நம்முடைய இயலாமையை தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்வதுதான்.

இவ்வாறாக விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்க முடியும் மாறாக அருமையான அழகான கவர்ச்சி மிக்க வார்த்தை ஜாலங்களை போட்டு மக்கள் மத்தியில் தான் மாத்திரம் ஜெபிக்க தகுதியானவன் என்று சான்று பெற துடித்து மனிதர்களை மாத்திரம் சார்ந்து ஜெபிக்கிற ஜெபம் பிரயோஜனமற்றதுதான். இதை தான் இன்றைய சபைகள் செய்து வருகிறது. இதை போல பயனற்ற

ஜெபத்தை அஞ்ஞானிகள் கூட ஜெபித்திடமுடியும் தன் முழு இயலாமையையும் உணராத ஜுவியத்திலிருந்து தோன்றும் எந்த ஜெபமும் தேவனுக்கு முன்பாக யாதொரு மதிப்பும்மற்றதேயாகும்.ஆனால் விசுவாசமுள்ள ஜெபத்தையோ யாதொருவன் தன் இயலாமையையும் நிர்கதியையும் முற்றிலுமாய் உணர்கிறானோ அவன் மாத்திரமே ஏறெடுக்க முடியும் இதைத்தான் ஆவியினால் ஜெபிக்கும் ஜெபம் என்று வேதம் சொல்கிறது(எபேசியர்–6:18) இது போன்ற ஜெபம் மாத்திரமே தேவனிடத்தில் இருந்து பதிலை கொண்டுவருகிறது.

## பதில் கொண்டுவரும் ஜெபம்:

இந்த நாட்களில் நமக்கு மிகுந்த தேவையாக இருப்பது நெடுநேர ஜெபமல்ல மாறாக பதில் கொண்டு வரும் ஜெபம்தான். அதிக தேவையுள்ளதாக காணப்படுகிறது. ஜெபத்தில் கர்ஜிக்கிற ஜெபத்தில் நெடு நேர ஜெபத்தில் தேவன் பிரியமாக இருக்கிறார் என்று எண்ணுவது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாக இருக்கிறது. வேதாகம நாட்களிலோ அல்லது திருச்சபையின் சரித்திரத்திலோ வல்லமையான வலிமையான தேவ தாசர்களின் வாழ்க்கையை நாம் பார்த்தோமானால் உதாரணமாக–மோசே, தானியேல், தாவீது,பவுல் மற்றும் மார்டீன் லூத்தர்,ஜார்ஜ்முல்லர், வில்லியம்கேரி, கிரண்மெர் இன்னும் பலருடைய வாழ்க்கையை நாம் கூர்ந்து கவனித்தோமானால் இவர்கள் எல்லோரும் விசுவாசமுள்ள ஜெபவீரர்களாகவும் பதில் கொண்டு வரும் ஜெபத்தின் சுதந்திரவாளிகளாகவும் இருந்தார்கள் என்பது தான் உண்மை. மேலும் இவர்களை குறித்து ஜெப மாந்தன் என்று சில இன்றைய தேவ ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

தனி ஜெபம் இன்றைய கிறிஸ்துவ மக்களின் பின் மாற்றத்துக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் இவர்களது தனி ஜெபத்தை அசட்டை பண்ணியதின் நேரடி விளைவே பின் மாற்றத்துக்கான பிரதான காரணமாக காணப்படுகிறது. என்றைக்கு நாம் தனிஜெபத்தை தவிர்க்க நினைக்கிறோமோ அன்றே பின்மாற்றம் ஆரம்பமாகிறது. தனிஜெபம் செய்வதில் தவறுவது பின்மாற்றம் என்றால் நான் கிறிஸ்தவன் என்று சொல்லி கொண்டு ஜெபமே செய்யாதவர்களை எதில் சேர்ப்பது.சில சகோதரர்கள் இருக்கிறார்கள் சபையிலும் சரி, ஜெபகூடுகையிலும் சரி ஜெபம் செய்யுங்கள் என்று சொன்னால் அவர்களின் பதில் பிரதர் வேறு யாரையாவது சொல்லுங்கள் அல்லது வெட்கமாக இருக்கிறது அல்லது தெரியாது அல்லது எனக்கு எல்லாம் தெரியும் நான் தான் ஞானவான் என்று சிலர் பதில் ஏதும் இன்றி இருப்பார்கள், இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் என்று சொல்லி கொள்பவர்களுக்கு அடிப்படை தகுதி ஜெபிக்க தெரிந்து இருக்க வேண்டும். இந்த மாதிரியானவர்கள் எந்த தகுதியில் கிறிஸ்துவை நானும் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன் நானும் கிறிஸ்தவன் தான் என்று எப்படி கூற முடியும் சகோதரரே, அப்படியானால் நீங்களும் பின்மாற்றக்காரர்கள்தான். (தொடரும்)

# ஜேம்ஸ் சால்மர்
## (1841–1901)

இராபெட் மொபட், டேவிட் லிவிங்ஸ்டன், ஜாண் ஜி.பேட்டன், வால்டர் ஸ்காட், இராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன் போன்ற தேவ மனிதர்கள் உதித்த ஸ்காட்லாண்டு தேசத்தில் ஆகஸ்ட் 4–ஆம் தேதி 1841–ஆம் ஆண்டு ஆர்டிஸ்சா என்ற கிராமத்தில் பிறந்தார் ஜேம்ஸ் சால்மர். அவருடைய தந்தை கல்தச்சர், வேலைக்காக வெளியூர் சென்றவர் வீடு திரும்பவேயில்லை. தாய்ரஸ் என்ற சிற்றூரில் தோன்றினார். சிறு வயது முதல் ஜேம்ஸ் சால்மர் ஒழுக்கமுள்ளவராக வளர்ந்தார். இந்த எளிய பக்தியுள்ள, கிறிஸ்தவ பெற்றோருக்கு இன்னும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். தனது வீட்டினருகே இருந்த கடலில் விளையாடுவதும், அங்குள்ள மீனவர்களின் நண்பனாகவும் இருந்தார் ஜேம்ஸ் சால்மர். பள்ளிக்கு அழைத்துச் சென்ற அவருடைய தாயார் ஆசிரியரைப் பாாத்து ஐயா, என் மகனைக் கண்டிப்பதற்கு நீங்கள் சற்றும் தயங்க வேண்டாம் என்றது ஜேம்ஸின் மனதில் பதிந்திருந்தது. அதை அவர் ஏற்றுக்கொள்ளவும் செய்தார். கிராம வாலிபனாக வாட்ட சாட்டமாக, தைரிய நெஞ்சுடையவராக திகழ்ந்தார். அவருடைய இயற்கை சுபாவமே அவர் ஒரு தலைவர் என்பதை எடுத்தியம்பிற்று. கடலில் அனுபவமுள்ள ஜேம்ஸ் பத்து வயதாயிருக்கும்போது, தனது சக பள்ளி மாணவனைக் கடலின் அலையிலிருந்து காப்பாற்றினார். மற்றொரு முறை கடலில் வீழ்ந்த சிறு குழந்தையை மீட்டார்.

ஓய்வு நாள் பாடசாலையில் ஒருநாள் போதகர் மெக்கின் பிஜி தீவுகளில் பணியாற்றிய ஒரு மிஷனெரியின் கடிதத்தை வாசித்தார் அக்கடிதத்தில் நரமாமிசம் உண்கிற பழங்குடி மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியம், அதன் தேவைகளைப்பற்றி இருந்தது. போதகர் இப்படிப்பட்ட நரமாமிசம் உண்ணும் பழங்குடி மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க இங்கு யார் உண்டு? என அறைகூவலிட்டார். தேவ ஆவியானவர் ஜேம்ஸ் சால்மர் உள்ளத்தில் பேசினபடியால் ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னை அனுப்பும் என தனதுள்ளத்தில் ஜெபித்தார். பின்பு வீடு திரும்பும்போது சாலை அருகே முழங்கால் படியிட்டு ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும் ஒரு மிஷனெரியாக என்னை அனுப்பும் என பிரார்த்தனை செய்தார். போதகர் மெக்கின் மற்றும் திரு.டன்கன் போன்ற ஆவிக்குரிய தலைவர்கள் ஜேம்ஸ் சால்மரை உற்சாகப்படுத்தி வழிநடத்தினர். நாட்கள் சென்ற பின்பு, ஜேம்ஸ் சால்மர் ஒரு தேவ ஊழியரானார். பட்டணத்தில் நற்செய்திக் கூடுகைகள், வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்தி வந்தார். அதே வேளையில் தான் ஒரு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் மங்காமல் எரிந்து கொண்டே இருந்தது.

1865–ம் ஆண்டு அக்டோபர் 11–ம் தேதி ஜேன் ஹெர்கல் என்ற பெண்ணை திருமணம் செய்தார். ஜேன் சால்மருக்கு ஏற்றத் துணையாக மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்து, வாஞ்சையுள்ள பெண்ணாக இருந்தார். ஆண்டவரை அறியாத மக்கள் அவரை அறியத் துடிப்பாகக் காத்திருந்த பெண் அவர். திருமணமாகி, இரண்டாம் நாளில் அபிஷேகம் செய்யப்பட்டு, ஜனவரி 4–ஆம் தேதி 1866–ல் “ஜாண் வில்லியம் –II” என்ற கப்பலில் பணிக்களம் செல்லப் புறப்பட்டார்கள்.

1867இல் மே மாதம் 20–ம் தேதி பசிபிக் கடலில் உள்ள அவருவா தீவுக்கு வந்தார்கள். அது ரரோ டோல்கா நகர் அருகே இருந்தது. முதலாவதாக நபராக

கரையிறங்கிய அவரை, உன் பெயர் என்ன என்று கேட்ட கேள்விக்கு ‘சால்மர்’ என்று பதில் கொடுத்தார். அதைக்கேட்ட அந்த பழங்குடி மக்களுக்கு அந்த பெயர் உச்சரிக்க முடியாமல் டமாட்டி என்று அழைத்தனர்.

ஒருமுறை கூட கேள்வியுராத மக்களைச் சந்திக்கவே நான் வந்தேன் என்றார். கிறிஸ்துவை சரிவர ஏற்றக்கொள்ளாத அம்மக்கள் குடிப்பழக்கத்தில் நிலைத்திருந்தனர். குடியை நிறுத்துவதே அவருடைய முக்கியப் பணியாகியது. காட்டுக்குள், அடர்ந்த புதருக்குள் இருந்து குடிக்கும் மக்கள் மத்தியில் திடீரெனச் சென்று மதுவைப் பூமியில் ஊற்றச் செய்துவிட்டு, கிறிஸ்துவைப் பிரசங்கிப்பார். சால்மரின் வாஞ்சை நரமாமிசம் உண்ணும் மக்கள் மீது இருந்தபடியால் குடும்பமாக நியு கினியா செல்ல ஆயத்தமானார். ‘கிறிஸ்துவிடம் நெருங்கி வரும்போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களின் பணி வாஞ்சையே என்னை ஆட்கொள்கிறது என்கிறார் சால்மர்.

1877-ம் ஆண்டு மே மாதம் நியூகினியா சென்றார். நாகரீகமற்ற, பாவம் நிறைந்த, மூடத்தனம் மிக்க, கொடூரமாக பழங்குடிகள் வாழுமிடமாயிருந்தது. ஒரு நாள் சால்மர் வீட்டிற்கு ஒரு பெருங்கூட்ட பழங்குடியினர் வந்து, எங்களுக்குக் கத்தி, கரண்டி, பாசி போன்ற பொருட்களைக் கொடு, இல்லாவிட்டால் உன்னைக் கொன்ற விடுவோம் என மிரட்டினார்களை. சால்மர் சற்றும் பயப்படாமல் என்னை வேண்டுமானாலும் கொன்று சாப்பிடு, ஆனால் என்னிடமிருந்து ஒரு சிறு பொருளையும் பயமுறுத்தி வாங்க முடியாது என தீர்க்கமாக கூறி விட்டார். மறுநாள் அந்தக்கூட்டத்தைச் சேர்ந்த தலைவன் வந்து அவரிடம் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டான். உடனே அவனுக்கு சில பரிசுப் பொருட்களை கொடுத்தார். சால்மரின் மனைவி ஜேன் அவருக்கு இணையாக ஊழியத்தில் மனிதர்களையே சாப்பிடும் கொடூர மக்கள் மத்தியில் அச்சமின்றி பணியாற்றினார்கள். ஒருநாள் இறந்து போன தனது கணவன் உடலையே விருந்தாக சமைத்து ஒருகூட்ட மக்களுக்கு பரிமாறினாள் ஒரு பெண். இப்படிப்பட்ட மக்கள் கிறிஸ்துவை அறிந்து வளரலானார்கள்.

சால்மரின் கடின உழைப்பால் 1878-ல் மனிதர்களை சாப்பிட்ட மக்கள் 1882-ல் மனந்திரும்பி, ஒருவரையொருவர் ஏற்று, ஐக்கியமாக அன்பாக வாழக் கற்றனர். நரமாமிசம் இல்லை, மனித மண்டை ஓடு, தாடை எலும்பு அணிகலன்களாக அணிவதில்லை. சண்டையிட்டு கொன்று தின்னும் இம்மக்கள் கிறிஸ்துவில் புது வாழ்வு பெற்றனர். 1901-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் தேதி “கோரிபாரி” என்ற தீவிற்குப் பயணமாகி ஏபல்ல 7-ம் தேதி ஈஸ்டர் மாலை அன்று அந்த தீவை அடைந்தார். சால்மர் உடன் ஊழியர் டாம் கின்ஸ் இருவரும் கோரிபாரி தீவில் இறங்கியதும் அவர்களை ஒரு பெரிய விருந்துச் சாலைக்கு அந்த பழங்குடி மக்கள் அழைத்துச் சென்றனர். தீடிரென மிஷனெரிகள் பின்புறம் இருந்து உருட்டுக் கட்டைகளால் தாக்கப்பட்டு, கீழே தள்ளப்பட்டு, தலைகள் துண்டிக்கப்பட்டன. அவர்கள் உடல்களை பெண்கள் சமைத்து அங்கிருந்த பெருங்கூட்ட பழங்குடியினருக்கு விருந்தாகப் படைத்தனர். ஜேம்ஸ் சால்மர் ஒருநாளும் பயங்கரமான இந்த பழங்குடியினருக்கு பயப்பட்டதில்லை காரணம் அவருக்கு மரணபயமில்லை. மனிதனையே உண்ணும் இந்த மக்களுக்காக தன்னையே பலியாக்கியமையால், இன்று சாட்சிமிக்க திரள்கூட்ட நரமாமிச பட்சினிகள் தேவனுடைய பிள்ளைகளாக, தலைமுறை தலைமுறைகளாக வாழ்கின்றனர்.

தொகுப்பு. கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் . சுகுமாரன்

# PRAISE THE LORD

## அன்புக்கு கீழ்படிதல் விசுவாசம்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இந்த புது மாதத்தை ஆரம்பித்து கொடுத்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த மாதத்தில் நம்மை கண்மணிபோல் பாதுகாத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுகம், ஜீவன், பெலன், நீடிய ஆயுளை கொடுத்து அவர்களின் தேவைகள், விண்ணப்பங்களை கேட்டு நம் குடும்பங்களுக்கு தேவன் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி கடன் செலுத்தவோம். கர்த்தர் இரக்கமும், உருக்கமும், நீடியசாந்தமும், கிருபையும் உள்ளவர். நம்முடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னிக்கிற தேவனாகிய கர்த்தர், தம்முடைய குணாதிசியங்களால் நம்மை ஆசீர்வதிக்கின்றார்.

அன்பு: உன்னிடத்தில் அன்பு கூருவது போல் பிறரிடத்திலும் அன்பு கூரு" என்று கூறின ஆண்டவர் நம்மேல் அன்பு கூர்ந்து எத்தனை நன்மைகள் செய்கிறார் என்று பார்ப்போம். சங்கீதம் 103 : 3,4,5. அவர் அன்புள்ள தேவன் நம்முடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிக்கிற தேனாயிருக்கிறார். பல வேளைகளில் உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு காத்து வருகிறார். உன் குடும்பத்திலும் வேலை ஸ்தலங்களிலும் பாதுகாக்கிற தேவன் நம்மோடு இருக்கிறார். இப்படி ஆண்டவர் நம்மிடம் அன்பாக இருக்கும் போது நாம் திருப்பி அவருக்கு என்ன செலுத்த வேண்டும், யாத் 20:6 என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கர்ப்பனைகளை கை கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராய் இருக்கிறேன் என்று கூறுகிறார். நாமும் அதிகாலையில் வேதம் வாசித்து தியானித்து அவர் வழிகளிலும் வார்த்தைகளிலும் நடக்கும் போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

விசுவாசம் : விசுவாசத்தின் தகப்பன் என்று ஆபிரகாம் அழைக்கப்பட்டார்.ஆதி 15:5,6 உன் சந்ததி வானத்தின் நட்சத்திரங்கள் போல இருக்கும் என்று ஆசீர்வதித்தார். பின்பு ஆதியாகமம் 15: 4,5,6 நான் உன்னை திரளான ஜனங்களுக்கு தகப்பனாக வைப்பேன் என்று ஆசீர்வதித்தார். ஆனாலும் ஆபிரக–ாம் 100 வயது ஆன போதும் சாராள் ஈசாக்கை பெற்றாள். பொறுமையுடனும் விசுவாசத்துடனும் பெற்றுக்கொண்டாள். அடுத்ததாக யோசுவாவுடன் ஆண்டவர் யோசுவாவுக்கு கொடுத்த வார்த்தையை பார்ப்போம் (யோசுவா 6: 2,3,4,5)வசனங்களில் கொடுத்த வார்த்தையின் படி யோசுவா ஆண்டவருடைய வார்த்தைகளை விசுவாசித்து நடந்த பொழுது எரிகோ பட்டனத்தாரை முறியடித்தார்கள். நாமும்கூட நம்முடைய விண்ணப்பங்களை ஆண்டவரிடம் மேட்கும் போது அவர் நமக்கு அருளிச் செய்வார் என்ற விசுவாசத்தோடு கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

கீழ்படிதல்: ஆண்டவர்கூட தன்னுடைய தகப்பனோடு 30 வருடங்கள் வீட்டிலிருந்து உதவி செய்தார். பின்பு மூன்றறை வருடங்கள் ஆண்டவருடைய ஊழியத்தை செய்து அநேக அற்புத அடையாளங்களோடு செய்து ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்தார். எவ்வளவு பெரிய கீழ்படிதல் (ஆதியாகமம் 12: 1,2,3,4) கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவர் தேசத்தை விட்டு தனக்கு குறித்த முன் பின் தெரியாத தேசத்திற்கு கீழ்படிந்து போனார் என்று பார்கிறோம் (ஆதியாகமம் 22: 2,12)வசனங்களில் ஆபிரகாம் தன் மகனை ஆண்டவருக்கு பலியிடுவதற்காக கீழ்படிந்து மோரியா மலைக்கு சென்றார். அதனால் ஆபிரகாமுக்கு எல்லா ஆசீர்வாதமம் கிடைத்தது என்று பார்க்கிறோம். அவர் மாத்திரம் அல்ல அவர் மகன் ஈசாக்கிற்கும் 100 மடங்கு பலனை கிடைக்க பெற்றார். நாமும் கூட நம் தாய் தகப்பன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உற்றார் உறவினர் எல்லாரோடும் அன்புடன் கீழ்படிந்து நடக்க பழகிக் கொள்வோம். நம் வேலை பார்க்கும் ஸ்தலங்களிலும் அதிகாரிகளுக்கு கீழ்படிந்து நடக்க கற்றுக் கொள்வோம். மற்றவர்களுக்கும் நமக்கும் ஆண்டவர் பெரிய வித்தியாசத்தை வைத்திருக்கிறார். ஆண்டவரை சிலுவையில் அறைவதற்கு முன்பாக தகாத வார்த்தைகளால் எள்ளி நகையாடி அவருடைய தாடையை பிடித்து இழுத்தார்கள். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்வனோ அவரை பார்த்து ஏளனமாக பேசுகிறான். கோலால் அடிக்கப்படுகிறார் ஆனாலும் நம் ஆண்டவர் கர்த்தருடய வார்த்தைக்கு கீழ்படிந்து ஆண்டவரிடத்தில் மன்றாடுகிறார் உமக்கு விருப்பமானால் என்னுடைய ஜீவன் இந்த உடலை விட்டு நீங்கட்டும் என்று எதிர்த்தவர்களை அடித்தவர்களை மன்னிக்கும்படி மன்றாடுகிறார். அருமையான தேவ பிள்ளைகளே கர்த்தர் நமக்காக யுத்தம் செய்கிறவராய் இருக்கிறார். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.(யாத் 15:14)ன் வசனத்திற்கேற்ப நம்மை தாழ்த்தி கர்த்தருக்கு கீழ்படியும் போது கர்த்தர் தம்முடைய வாழ்க்கையை உயர்த்துவார்.

உலகப்பிரகாரமான சிலர் இப்படி சொல்வார்கள் மேல்படிக்கு செல்ல வேண்டும் என்றால் கீழ்படியை நாம் மிதித்துதான் செல்ல வேண்டும். அதன்படி நாம் மேல்படிக்கு செல்ல வேண்டும் என்றால் நமக்கு கீழ்படிதல் மிக மிக அவசியம் அப்படி கீழ்படிந்து நடக்கும் பட்சத்தில் எல்லவற்றிலும் கர்த்தர் நம்மை ஆசீர்வாதத்தோடு நடத்துவார். எதிர்த்து நிற்கும் போது எப்படி பெருவெள்ளத்திற்கு எதிர்த்து நிற்கிற பெரிய பெரிய மரங்கள் வேரோடு பெயர்ந்து போய் விடும், ஆனால் வளைந்து கொடுக்கிற நானல் சிறியதாய் இருந்தாலும் வெள்ளம் வற்றியவுடன் தலைநிமிர்ந்து நிற்கிறதை காணலாம் அதுபோல பிரியமானவர்களே நாம் எதிர்த்து நிற்கும் பொது இருந்த இடம் தெரியாமல் போய்விட நேரிடலாம் நானலை போல வளைந்து கீழ்படிய கற்றுக் கொள்வோம்.

இந்த மாதத்தில் நாம் இந்த மூன்று குணங்களையும் ஜெபித்து பெற்றுக் கொள்வோமாக கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

# கடந்த மாத நிகழ்வுகள் தங்களின் பார்வைக்கு சில























## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுபபினர்கள்

**தலைவர் - சகோ. ரவிச்சந்திரன்**
23913675 - 66889706

**செயலாளர் - சகோ. ஜெயசேகர்**
23711698 - 96646444

**பொருளாளர்- சகோ. ஆரோக்கியதாஸ்**
99870126

**பெண்கள் ஐக்கிய தலைவி**
**சகோதரி. ஜெயக்கொடி ஜான் வெஸ்லி**
23731904 - 99145593

**வாலிப ஐக்கிய தலைவர் - சகோ. அற்புதராஜ்**
60692485

Church Website Address - ahmaditamilcongregation.org
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Postel Address
Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only